**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திருநாவுக்கரசருக்கு அமைந்த சிறப்புப் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. திருத்தொண்டர் தொகையுள் இடம் பெற்றுள்ள தனியடியார், தொகையடியார் எத்தனை பேர்?
3. குமரகுருபரர் இயற்றிய இரண்டு கலம்பக நூல்களைக் குறிப்பிடுக.
4. பெரிய புராணத்தில் காணப்படும் வரலாற்றுப் பதிவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. முப்பெரும் புராணங்கள் எவை?
6. திருமாலின் ஐம்படைகள் யாவை?
7. வைணவ உரையில் 'முப்பதாயிரப்படி' உரை எழுதியவர் யார்?
8. ஈர்ஐம்பதின்மர், நூற்றுவர் ஆகிய சொற்கள் யாரைக் குறிக்கும்?
9. 'சிரமணர்' என்பதன் பொருள் யாது?
10. சிலப்பதிகாரத்தில் சமணசமயக் கோட்பாட்டை உணர்த்தும் மாந்தர்கள் யார் யார்?
11. பௌத்த சமயம் செல்வாக்குப் பெற்ற தமிழ் நகரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. பெத்லகேம் குறவஞ்சி என்ற நூலின் ஆசிரியர் யார்?
13. கிறித்துவக் கீர்த்தனைக் கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
14. இஸ்லாமிய மூலக் கொள்கைகளான தொழுகை, கலிமா ஆகியவற்றை எங்ஙனம் வழங்குவர்?
15. நபி மொழிக்குறள் என்ற நூலை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. காரைக்காலம்மையார் அருளிச் செய்த நூல்களை எழுதுக.
2. காஞ்சிபுராணம் கூறும் ஒழுக்க விதிகளைக் கூறுக.
3. வைணவச் சான்றோர்களின் சிற்றிலக்கியங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
4. முதல் மூன்று ஆழ்வார்கள் பற்றி எழுதுக.
5. நாலடியார் புலப்படுத்தும் சமணசமயக் கருத்துகளை எழுதுக.
6. பசிப்பிணியின் கொடுமையை விளக்குக.
7. பெண் மேம்பாட்டுக்கு வேதநாயகம் பிள்ளை எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
8. நபிகள் நாயகம் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களில் ஒன்றை விவரிக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மாணிக்கவாசகர் பற்றியும் அவர் தம் நூல்களின் பக்தி நயத்தையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வைணவக்காப்பியங்கள் உணர்த்தும் இறைத்தன்மையை விளக்கியுரைக்க.

2. (அ) பன்னிரு ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் பெறும் இடத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணியில் இடம்பெறும் சமண சமயக்கோட்பாடுகளை விரித்துரைக்க.

3. (அ) தமிழ் உரைநடை வளர்ச்சியில் கிறித்துவர்களின் பங்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமிய மெய்ஞ்ஞானம் பற்றிய கருத்துகளை விவரிக்க.

❋ ❋ ❋